1981 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 112 இலட்சங்கள். இத் திட்டத்தால் பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் வட்டத்திலுள்ள சிங்காரசம்பாளையம், வரதம் பாளையம், காட்டுவீரம்பாளையம் ஆகிய கிராமங்களிலுள்ள 811 ஏக்கர் புஞ்செய்ப் பாசனம் பெற வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

விராலிமலைப் பகுதியில் டி.வி.எஸ். நிறுவனத்தின் கிளை ஒனறினைத் துவங்கும் திட்டம்.

*வினா எண். 941—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலைப் பகுதியில் டி.வி.எஸ். கம்பெனி (கிளை) துவங்க திட்டமிடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அப்பகுதி மக்களுக்கு பணி முன்னுரிமை கொடுக்கும் படி நிர்வாகத்தினருக்கு அரசு ஆலோசனை வழங்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) இப்போதே அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்குத்தான் வேலைகள் கொடுக்கப்படுகின்றன.

(முற்பகல் 9.50)

திரு. த. மாரிமுத்து : டி.வி.எஸ். நிறுவனம் அரசாங்கத்திடம் உதவி ஏதாவது கோரியுள்ளதா ? அது எவ்வளவு ரூபாய் முதலீட்டில் அமைய உள்ளது ? எவ்வளவு பேர்களுக்கு அதில் பணி புரிய வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : திருவாளர் சுந்தரம் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் மதுரை, அந்தப் பகுதியில் மோட்டார் வாகனத் தொழிற்சாலை கட்டுமானப் பணிகள் செய்கிற தொழிற்சாலை துவங்கு வதற்காக அந்தத் தொழிற்சாலைக்கான கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. முதலீடு ஏறக்குறைய ஒன்றேகால் கோடி ரூபாய். 200 பேர்களுக்கு நேரடியாக வேலையும் அதத் தொழிற்சாலைக்கு வேண்டிய துணைத் தொழிற்சாலை ஏற்படுவதின் மூலம் 100 பேர்களுக்கு வேலையும் இப்படி ஏறக்குறைய 500 பேர்களுக்கு வேலை கிடைக்கும். பின்தங்கிய பகுதியில் அவர்கள் அதை ஆரம்பிக்கிற காரணத்தால் அதற்கான மானியமும் மற்றும் சப்சிடியும் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். அவ்வளவுதான்.

திரு. த. மாரிமுத்து : விராலிமலைப் பகுதி மக்களுக்கு விவசாயம் தவிர வேறு தொழில்கள் கிடையாது. பருவமழை தவறிப் போனால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அந்தப் பகுதியில் அரசு சார்பில் தொழில் நிறுவனங்கள் அமைத்து மாற்றுத்தொழில் அந்த மக்களுக்கு ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : அந்தப் பகுதி பின்தங்கிய பகுதி என்ற காரணத்தால்தான் சுந்தரம் இன்டஸ்ட்ரீஸ் அந்தத் தொழிற்சாலை துவங்க பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

சேலம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் நூற்பாலைகள் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 942—திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலத்தில் நூற்பாலை ஒன்று ஏற்படுத்த அரசிடம் திட்டமுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இல்லை.

*வினா எண். 943—திரு. சு. அங்குசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவக்கோட்டைக்கு அருகில் உள்ள வேலாயுத பட்டினத்தில் கூட்டுறவு நூற்பாலை கட்டும் உத்தேசம் அரசிற்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அது எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சீ. சிவப்பிரகாசம் : சேலம் மாவட்டம் சேந்தமங்கலம் தொகுதியில் எந்தவிதமான தொழில் வசதியும் இல்லை. ஆகவே நூற்பாலை அமைக்கும் திட்டத்தில் சேந்தமங்கலத்தில் ஒரு நூற்பாலை நிறுவ இனிமேலாவது அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒன்றும் தர்மபுரி மாவட்டத்தில் ஒன்றும் அதேபோல் மதுரை (தேனி) மாவட்டத்தில் ஒன்றும் இப்படி மூன்று மாவட்டங்களில் கூட்டுறவுத் துறையில்